தொகுதி- ருஎ : : பகுதி-க — Vol. 57 : : No. 1

# செந்தமிழ்

திருவள்ளுவர்
**ஆண்டு 1992**
*பிலவ—சித்திரை*
APRIL — 1961

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

*(வெளியிட்ட நாள் 20—4—61)*

## உள்ளுறை

1. உலகச் சமயங்கள்
கி. பழநியப்பன் 1

2 இடைக்காலத்தில் உரைநடை
இரா. நடராசன் எம்.ஏ., எம்.லிட்., 6

3. மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு
இரா. இளங்குமரன் 13

4. இளம்பூரணர் எழுத்துரை
ஆ. சிவலிங்கனார், மயிலம். 19

---

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி டி. இராசன்.
B. A., (Bar-at-Law) M. L C.

2. திரு. சித்தாந்தகலாநிதி. பேராசிரியர். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D.
சென்னை.

4. திரு. பேராசிரியர், பி, சோதிமுத்து. M. A. B. D.

5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.

6. திரு வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர்.
மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர். மதுரைத் திருவள்ளுவர் கழகம் .

8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர்,
தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை
# செந்தமிழ்

| தொகுதி ருஎ<br>Vol. 57 | திருவள்ளுவர் ஆண்டு 1992<br>பிலவ—சித்திரை<br>1961 — April | பகுதி க<br>No 1 |
|---|---|---|

# உலகச் சமயங்கள்

கி. பழநியப்பன், மதுரை.

## 7. புத்தர் சமயம்

56 ஆம் தொகுதி, 364–ஆம் பக்கத் தொடர்ச்சி

"உண்மை அறிவை நாடி அலேகின்றேன். நான் எங்கும் தங்க முடியாது" என்ருர்.

"அவ்வாருயின் தாங்கள் உண்மையை உணர்ந்தவுடன் எனக்கு அதைக் கூறவேண்டும்" என்று மன்னன் பணிந்து வேண்டினுன். சித்தார்த்தரும் அவ்வாறே செய்வதாக வாக்களித்தார்.

உண்மை அறிவை நாடிச்சென்ற சித்தார்த்தர் அலாரா என்ற ஒரு பேரறிஞரைக்கண்டு தமக்கு உண்மையை விளக்குமாறு வேண்டினுர். "வேதங்களேப் படி. உனக்கு வேண்டிய விளக்கம் அதில் காண்பாய்" என்ருர். இதுபோன்றே மற்றும் பல பெரியார்கள் கூறினர். ஆனல் சித்தார்த்தருக்கு அதில் மனம் நாடவில்லே. ஏனெனில் அவர் பல நாட்கள் அவ்வேதங்களேத் துருவித் துருவிப் படித்தும் தாம் விரும்பியதைக் காணுதவர்.

ஒருநாள் தம்மைப்போன்று உண்மையை நாடும் ஐவரைச் சித்தார்த்தர் வழியில் கண்டார். உடலே வருத்துவதன் மூலம் உள் ஒளியைப்

பெருக்கி உண்மையைக்காணலாம் என்று அவர்கள் நம்பினார்கள். சித்தார்த்தரும் அவர்களுடன் சேர்ந்து காட்டிற்குச்சென்று பல நாட்கள் உண்ணாதிருந்து பல வகைகளில் உடலை வருத்திவந்தார். அதன் பயனாக உடல் மெலிந்து, எலும்பும் தோலுமாகியதோடு, ஒருநாள் மூர்ச்சையாகிக் கீழே விழுந்துவிட்டார். நண்பர்கள் அவர் இறந்துவிட்டார் என்றே கருதினர். சற்றுநேரம் கழித்து மூர்ச்சை தெளிந்து எழுந்த சித்தார்த்தர் அவர்களை வணங்கி "உங்களுக்கு நன்றி. இன்று முதல் பட்டினிகிடந்து உடலைத் துன்புறுத்தும் செயலில் நான் ஈடுபடமாட்டேன். நான் சென்று வருகின்றேன். விடை கொடுங்கள்" என்று கூறி அவர்களை விட்டு நீங்கினார்.

காடுகளிலும், மலைகளிலும், நகரங்களிலும் பல நாட்கள் சுற்றி அலைந்தும் சித்தார்த்தருக்கு உண்மை விளங்கவில்லை; எடுத்துக்கூறுவோரும் ஒருவருமில்லை. சோர்வுற்ற சில சமயங்களில் மனைவி மக்களை நாடி வீடுதிரும்பவும் எண்ணினார். ஆனால் அவ்வாறு செய்ய அவர் துணியவில்லை. இவ்வாறு பல நாட்கள் அலைந்து ஓர் உண்மையைத் தெரிந்து கொண்டார். "நாம் நாடும் அறிவு எங்கோ கண்களுக்கு எட்டாத ஓர்இடத்தில் இல்லை; ஏடுகளில் அதைக் காணமுடியாது; ஆனால் அது இருக்கும் இடம் நம்முடைய உள்ளமே யாகும். உள்ளத்தைத் தேடினால் உண்மை விளங்கும்" என்ற பேருண்மையை உணர்ந்தார். ஒரு போதி மரத்தடியிலே அமர்ந்தார். சிந்தனையில் ஆழ்ந்தார். தான் கண்டன, கேட்டன, கற்றன எல்லாவற்றையும் எண்ணி எண்ணிப் பார்த்தார். மணிக்கணக்காக அமர்ந்திருந்தார். இரவு முழுவதும் அவ்வாறே இருந்தார். முடிவில் உள்ளொளி பெற்றார். பேருண்மையை உணர்ந்தார். அவர் திருமுகம் மலர்ந்தது.

"நன்மையிலிருந்தே நன்மை தோன்றும்
தீமையிலிருந்தே தீமை தோன்றும்"

இதுவே போதி மரத்தடியில் சித்தார்த்தர் கண்ட முதல் உண்மை. இவ்வொளியைக் கண்ட சித்தார்த்தர் அன்று முதல் புத்தரானார். புத்தர் என்றால் "அறிவு ஒளிபெற்ற பெரியார்" என்பது பொருள். புத்தர் ஒளிபெற்ற இரவு அன்று புத்தசமயத்தினருக்கு ஒரு புனித நாளாகும்.

உண்மையின் ஒளி கண்ட புத்தர் நாட்டுமக்களுக்குத்தாம் கண்டதைக் கூற எண்ணினார். காசி நகரை நாடினார். அங்கு, அவர்

முன்பு கண்ட தவயோகிகள் ஐவரையும் கண்டார். தாம் கண்ட உண்மையை அவர்களுக்கு விளக்கிக்கூறினர்.

"கர்மம் அல்லது வினைப்பயன் ஒன்று இருப்பதாக நாம் நம்புகின்றோம்.

அது உண்மையாயின், நல்வினை செய்தோர் நற்பயனையும் தீவினை செய்தோர் தீப்பயனையும் அடையவேண்டும்.

அப்படியாயின், நாம் வணங்கும் கடவுள்களுக்குச் செய்யும் வேள்விகளும் பலிகளும் வழிபாடுகளும் பொருளற்றனவாகும்.

ஏனெனில், மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடுவது நீரின் இயல்பு. நெருப்பின் இயல்பு சுடுவதாகும். பனிக்கட்டியின் இயல்பு குளிர்ச்சியாகும். இவைகளின் இயல்புகளை மாற்ற வேண்டுமென்று நாம் எத்தனை வேள்விகளை நடத்தினாலும், பலிகள் கொடுத்தாலும் ஒருபொழுதும் மாற்ற இயலாது. அது போன்று செய்த வினையையும் எவ்வகையிலும் மாற்ற இயலாது. அதன் பயனைச் செய்தவன் அனுபவித்தே யாகவேண்டும்.

ஆகவே, கடவுள் உருவங்களை வைத்து வழிபடுவதால் ஒரு பயனுமில்லை. நன்மை செய்பவர்கள் நன்மை யடைவதையும் தீமை செய்பவர்கள் தீமை யடைவதையும் ஒருவராலும் மாற்றமுடியாது.

ஆகையால், உருவவழிபாடு பயனற்றது; தேவையற்றதுமாகும்.

இவைகள் உண்மையாயின் இவற்றிற்குப் புறம்பான கருத்துக்களைக் கூறும் வேதங்கள் மெய்நூலாகா. அதனால் அவைகள் ஆண்டவனால் ஆக்கப்பட்டன என்பது பொய்யாகும்.

உலகம் ஒருவராலும் படைக்கப்படவில்லை. அது என்றும் இருந்துவரும் ஒரு பொருளாகும்." இவ்வாறு புத்தர் தாம் அறிந்த உண்மைகளை எடுத்துக் கூறி மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதையும் கூறினர். அவைகளே எண்வகை வழிகள் எனப்படும்.

1. வாய்மையே மனிதனுக்கு வழிகாட்டியாகவேண்டும்.
2. உயிர்ப் பிராணி எதற்கும் யாதொருதுன்பமும் செய்யாது எப்பொழுதும் அமைதியாக இருக்கவேண்டும்.

3. பொய் பேசாது, புறங்கூருது; கடூமான சொற்களைச் சொல்லாது இருக்கவேண்டும்.
4. திருடாது, கொலைத் தொழில் செய்யாது, பின்னுல் தாமே அதற்காக வருந்தக்கூடிய செயல்களைச் செய்யாது இருக்க வேண்டும்.
5. பொய்க்கையொப்பம், திருட்டுச் சொத்து வாங்குதல், அதிக வட்டி வாங்குதல் முதலிய தீய தொழில்களில் ஈடுபடாது இருக்கவேண்டும்.
6. எப்பொழுதும் நல்ல செயல்களிலேயே ஈடுபட்டுத் தீய செயல் களிலிருந்து விலகி இருக்கவேண்டும்.
7. இன்ப துன்பங்களினுல் மகிழ்ச்சியோ கவலையோ கொள்ளாது அமைதியாக இருக்கவேண்டும்.
8. இவ்வழிகளைப்பின்பற்றி அமைதி பெற்றவர்களே தியானத்தில் வெற்றி பெறுவர்.

மேலும் மக்கள் நல்வாழ்வு வாழக் கீழ்க்கண்ட ஐந்து கட்டளைகளைப் புத்தர் கூறினுர்:

1. கொல்லாமை[1]
2. கள்ளாமை[2]
3. பொய்யாமை[3]
4. பிறனில் விழையாமை[4]
5. கள்ளுண்ணுமை[5]

---

1. அறவினை யாதெனில் கொல்லாமை; கோறல்
பிறவினை யெல்லாம் தரும். (திரு. 321)

2. உள்ளத்தால் உள்ளலுந் தீதேபிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல் (திரு. 282)

3. பொய்யாமை அன்ன புகழில்லை; எய்யாமை
எல்லா அறமும் தரும் (திரு.296)

4. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்ருேர்க்கு
அறன் ஒன்ருே ஆன்ற ஒழுக்கு (திரு. 148)

5. துஞ்சினுர் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர் (திரு. 269)

புத்தரின் ஆன்ற கருத்துக்களைக்கேட்டு அவ்வழிகளில் வாழ்க்கை நடத்த முதலில் முன் வந்தவர்கள் அவருடைய நண்பர்களான ஐந்து தவயோகிகளே யாகும். மற்ற மக்களுக்கும் இவைகளை எடுத்துக்கூற அவர்கள்முற்பட்டனர்; அதைப்புத்தசமயம் என்று கூறினர்.

மகத நாட்டு அரசன் பிம்பிசாரனுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றப் புத்தர் அங்குச் சென்றார். அரசனைக்கண்டு தாம்கண்ட உண்மைகளைக் கூறினார். அதைக்கேட்ட அரசன் மகிழ்ச்சியுடன் புத்தர் சமயத்தைத் தழுவினான்; தன் நாடு முழுவதும் புத்தசமயத்தைப் பரப்ப எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டான்.

சில நாட்களில் புத்தரின் புகழ் வெகுதூரம் பரவியது. புத்தரின் தந்தைக்கு இச்செய்தி எட்டியதும் தூதர்களை அனுப்பி அவரைத் தம் நாட்டிற்கு அழைத்து வரச்செய்தார். புத்தரும் அழைப்பை ஏற்று, எட்டு ஆண்டுகளுக்கு முன் ஒருவரும் அறியாது நள்ளிரவில் வெளியேறிய அரண்மனையை நோக்கித் தம் சீடர்களுடன் சென்றார். தந்தையும், மனைவியும் உற்றார்களும் அவரை வரவேற்று, அவருடைய பொன்மொழிகளைக்கேட்டு, அவர் சமயத்தை ஏற்றனர். அரசனைப் பின்பற்றி அந்நாட்டு மக்களும் புத்த சமயத்தைத் தழுவினர்.

பின்பு புத்தர் பல ஆண்டுகள் தம் சீடர்களுடன் நாடு முழுவதும் சென்று தம் சமயக் கொள்கைகளை விளக்கிக்கூறிவந்தார். பாரத நாட்டில் நாளும் புத்தர்சமயம் வளர்ந்து வந்தது.

புத்தர் தம்முடைய எண்பதாவது வயதில் நோய் வாய்ப்பட்டு மரணப் படுக்கையில் இருக்கும் பொழுது, அவருடைய சீடர்கள் கவலையுற்றனர். அதைக் கண்டு அவர்களுக்குக் கடைசியாகப் புத்தர் கூறிய மொழிகள் இவையே:

> ''நான் இறந்தவுடன் உங்களைத் தனியாகவிட்டுப் புத்தர் பிரிந்துவிட்டார் என்று எண்ண வேண்டாம். நான் கூறிய அறவுரைகள் உங்களிடையே இருக்கின்றன. நான் காட்டிய வழிகளை நீங்கள் அறிவீர்கள். அவைகளே உங்களுக்குத்துணையாக இருக்கும். புத்தர் உங்களை விட்டுப் பிரியவில்லை''

ஆசியச் சுடர் ஒளியான புத்தர் பெருமான் முடிவில் கி. மு. 477-ஆம் ஆண்டு தம் பூதவுடலை விட்டுப் பிரிந்தார்.

(தொடரும்)

உ

# இடைக்காலத்தில் உரைநடை

(இரா. நடராசன். எம். ஏ, எம். லிட்.
மதுரைக் கல்லூரி, மதுரை.)

56 ஆம் தொகுதி—351 ஆம் பக்கதொடர்ச்சி

ஆங்கிலத்தில் 'ஒருவனது இயல்பை அவனெழுதும் உரை நடையே உணர்த்தும்' (Style is the man) என்றொரு பழமொழி உண்டு. ஒருவர் எழுதும் உரைநடைக்கும் மற்றொருவர் எழுதும் உரைநடைக்கும் வேறுபாடுகள் மிகுதியாகத் தோன்றக் காரணம், அவரவர் ஆற்றலுக்கும், மனத்திற்கும் ஏற்றவாறு உரைநடை தோன்றுவதுதான். ஆகவே உரைநடையில் கடிய நடை உண்டு; எளிய நடை உண்டு; இனிய நடை உண்டு; செய்யுள் நடை உண்டு; அஃது அவரவர் ஆற்றலுக்கும் உளப்போக்கிற்கும் ஏற்ற வகையில் பல்வேறு வகைப்படும் என்பதனை ஈண்டு உணர்தல் நலம்.

நிற்க, முற்காலத்தில் உரைநடை அறியப்பட்டிருந்ததாயினும், உரைநடையில் நூல் எழுதும் வழக்கம் இருந்ததில்லை என்பதை முன்னரே கண்டோம். அக்கால உரைநடை அடிவரையறை யில்லாத ஒருவகைச் செய்யுள் போலவே கருதப்பட்டது. உண்மையான உரைநடை மேலைநாட்டுப் பாதிரிமார்களின் வருகையிலிருந்தே தொடங்குகின்றது. தமிழைப் பயிலாத அளவில் தமது சமயத்தைப் பரப்பும் வாய்ப்பு தமக்கில்லை எனக்கண்ட அவர்கள் தமிழினைக் கற்று அனைவரும் அறிதற்கேற்ற உரைநடை நூல்களை எழுதினார்கள்.

தமிழில் முதல் உரைநடை நூல் உண்டானது கி. பி. 1577-இல் என்பது உறுதியாகத் தெரிகின்றது. பதினாறும் நூற்றாண்டிற்குப் பிறகு, பதினேழாம் நூற்றாண்டில், இராபர்ட் நொபிலி என்னும் தத்துவபோதக சுவாமி சில உரை

நடை நூல்களை எழுதினர். இந்த நூற்றுண்டில் இவரைத் தவிர, அருளானந்தர் என்னும் பெயருள்ள ஜான்-டி-பிரிட்டோ பாரதியார் சில உரைநடை நூல்களைத் தமிழில் எழுதியிருப்பதாகத் தெரிகின்றது. ஆனால், அருளானந்த சுவாமி எழுதிய நூல்கள் இதுவரை கிடைக்கவில்லை.

அதன் பிறகு, 18-ஆம் நூற்றுண்டில், பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் சில உரைநடை நூல்களை இயற்றியிருக்கின்றார். இவர் காலத்திலே, தஞ்சைக் கடுத்த தரங்கம்பாடியில் வாழ்ந்திருந்த சீகன்பால்கு முதலான செர்மனி தேசத்துப் பாதிரிமார்களும் சில உரைநடை நூல்களை இயற்றியிருக்கின்றனர். இதே நூற்றுண்டில் திருவாவடுதுறை ஆதினத்தைச் சேர்ந்த மாதவச்சிவஞான சுவாமியின் உரைநடை வீரமாமுனிவரின் உரைநடையைப் போன்று மிகச் சிறந்து விளங்குகின்றது. செர்மனி தேசத்தவரான சீகன்பால்கு ஐயர் எழுதியஉரைநடை பொதுமக்களுக்கேற்ற கொச்சைத் தமிழ் நடையில் அமைந்தது.

தமிழில் உரைநடை நூல் முதன் முதல் தோன்றியது 16-ஆம் நூற்றுண்டில் தான். என்றாலும், அது வேரூன்றி நிலைபெற்று வளரத் தொடங்கியது சென்ற 19-ஆம் நூற்றுண்டுகளில்தான். 17, 18-ஆம் நூற்றுண்டுகளில் தமிழ் உரைநடை நூல்கள் அதிகமாக ஏற்படவில்லை, கி. பி. 1577-இல் முதல் உரைநடை நூல் உண்டானதற்குப் பிறகு இரு நூறு ஆண்டுகள் வரையிலும், தமிழ் உரைநடை வளர்ச்சிபெருமலே குன்றியிருந்தது. சென்ற 19-ஆம் நூற்றுண்டில் தான் தமிழ் உரைநடை நூல்கள் ஏராளமாக வெளிப்படத்தொடங்கின. இது வியப்புத்தான். இருநூறு ஆண்டுகளாக உரைநடை வளர்ச்சி தடைப்பட்டிருந்தது, பிறகு திடீரென்று வளரத் தொடங்கியதென்றால், தடைப் பட்டிருந்ததற்கும், திடீரென்று வளர்ந்ததற்கும் காரணமிருக்க வேண்டு மன்றோ? அக்காரணந்தான் யாது? காரணம் அரசியற் குழப்பங்களே.

16-ஆம் நூற்றுண்டு முதல் 19-ஆம் நூற்றுண்டு வரையில், நமது நாட்டு வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் இது நன்கு விளங்கும். பண்டைத் தமிழ் மன்னரும் சிற்றரசரும் அரசாட்சி இழந்து, புதிய புதிய அரசர்களும், தலைவர்களும் இந்நாட்டில் தோன்றினர். பிறகு அவரும் அழிந்தொழிய, குறுநில மன்னர்களும் பாளையக்காரர்களும் அரசாண்டனர். இவர்கள் காலத்தில் வலியவன் மெலியவனை அடித்துப் பிடுங்குவது என்கின்ற முறை நாடெங்கும் நடைபெற்று வந்தது. பிரெஞ்சு, இங்கிலிஷ் கம்பெனிக்காரர் சண்டைகளும், கர்நாடக நவாப்புகளின் போர்களும், பாளையக்காரரின் தொல்லைகளும், மராட்டியரின் படையெடுப்பும், ஐதராலி திப்புசுல்தான் கலகங்களும் ஆகிய அரசியற் குழப்பங்கள் ஏற்பட்டு, நாட்டு மக்களைப் படாதபாடு படுத்தி விட்டன. நிலைபெற்ற அரசாட்சியும், உயிருக்கும் பொருளுக்கும் பாதுகாப்பும் இல்லாமையாலும், மேற்சொன்ன குழப்பங்களின் காரணத்தாலும், மக்கள் கல்வியிற் கருத்துச் செலுத்த வில்லை. ஆனாலும் காரிருளில் மின்மினி தோன்றுவது போல், இந்தக் குழப்பக்காலத்திலும், சமயத் தொண்டாற்றி வந்த கிறித்தவப் பாதிரிகளும், சைவ மடாதிபதிகளுமே ஒருவாறு கல்வியிற் கருத்தைச் செலுத்த முடிந்தது. இச்சிறுபான்மையோராகிய சமய ஊழியர்களிலும் ஒருசிலர்தாம் உரைநடை நூல் இயற்ற முன் வந்தனர். விரல் விட்டெண்ணக் கூடியபடி, மேலே, குறிப்பிட்ட நாலைந்து உரைநடை நூலாசிரியர்களைத் தவிர, வேறு ஆசிரியர்கள் 19-ஆம் நூற்றுண்டு வரை ஏற்படவில்லை.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் அரசியற்குழப்பங்களும், சண்டைகளும் ஒழிந்து, ஆங்கில அரசாங்கம் நிலைபெற்று, உயிருக்கும் பொருளுக்கும் பாதுகாப்பும், நாட்டில் அமைதியும், ஒழுங்கும் ஏற்பட்ட பொழுது, இயற்கையாகவே மக்கள் கல்வியிற் கருத்தைச் செலுத்தினர்கள். அன்றியும், இந்நூற்றுண்டில்தான் பாதிரி

மார்களாலும் அரசாங்கத்தாராலும் நாடெங்கும் பாடசாலை கள் நிறுவப்பட்டன. நாட்டவர்களால் நடத்தப்பட்ட பள்ளி களுக்கு அரசியலார் பொருளுதவி செய்து ஊக்கப்படுத்தி னர். இவ்வாறு ஆங்காங்கே பள்ளிகள் ஏற்பட்டபடியாலும், இப்பள்ளிகளில் மேலைநாட்டு முறைப்படி இலக்கியம், வரலாறு முதலான எல்லாப்பாடங்களையும், உரைநடைப் பாடமாகக் கற்பிக்கத் தொடங்கியபடியாலும், தமிழ்உரை நடை நூல்கள் ஏராளமாக எழுதப்பட்டன. இஃதன்றியும், இந்த நூற்றூண்டிலேதான் அச்சுப்பொறிகள் நாடு முழுவ தும் ஆங்காங்கே நிறுவப்பட்டன. கிறித்தவச்சங்கங்களின் வழியாக மதத்சார்பான நூல்கள் பல அச்சிடப்பட்டு, குறைந்த விலைக்குக் கொடுக்கப்பட்டன. இதன்வாயிலா கவும் உரைநடை நூல்கள் தமிழ்நாட்டிற் பரவ வழியுண்டா யிற்று. பாதிரிமார்கள் செய்துவரும் இத்தகைய சமய ஊழி யத்தைக் கண்டு, இதுகாறும் இக்காரியத்தில் உறங்கிக் கிடந்த இந்துக்கள் விழிப்படைந்து, இந்துமதச்சார்பான நூல்களையும் புராண இதிகாசங்களையும் உரைநடை நூல் களாக எழுதி வெளியிடத் தொடங்கினர்கள்.

இவை ஒருபுறமிருக்க, பத்தொன்பதாம் நூற்றூண்டில் கல்வி வளர்ச்சியை முன்னிட்டுச் சில சங்கங்கள் தோன்றி, தமிழ் உரைநடை நூல்களை வெளியிட உதவி புரிந்தன. சென்னைக்கல்விச்சங்கம் (Madras college) என்னும் ஒரு சபை ஏற்பட்டு, பாடப்புத்தகங்களையும் எழுதி வெளியிட் டது. 'சென்னைப்பாடசாலைப் புத்தகச்சங்கம்' (The Madras school Book society) என்னும் சங்கம் 1850-இல் ஏற் பட்டு, பல உரைநடை நூல்களை எழுதி வெளியிட்டு உதவிற்று. இந்தச்சபையார் நல்ல உரைநடைநூல் எழுது வோருக்குப் பொருளுதவி செய்து பரிசளித்து வந்தனர்.

2

'இராபின் குருசோ' 'இந்திய சரித்திரம்' 'உலகசரித்திரம்' முதலிய சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள் இச்சங்கத்தார் அளித்த பரிசு காரணமாக வெளிவந்தவை. அக்காலத்தில் வெளிவந்த சிறந்த உரைநடை நூல்கள் மீண்டும் மீண்டும் அச்சிடப்படாமையால் இப்போது மறைந்துவிட்டன. சென்ற நூற்றுண்டில் அரசாண்ட கிழக்கிந்திய அரசியலார் 'நன்னூல்' இலக்கணத்தை உரைநடையாக எழுதுவோருக்குப் பரிசு அளிப்பதாக விளம்பரம் செய்தார்கள். அதன் பயனுகத்தான் தமிழில் உரைநடை இலக்கணங்கள் தோன்றின. இவையன்றியும்,சென்ற நூற்றுண்டில்தான் செய்தித்தாள்களும், மாத வார வெளியீடுகளும், தமிழ்நாட்டில் தோன்றி உலவத்தொடங்கின. இவ்வாறு பற்பல வகைகளில் தமிழ் உரைநடை இலக்கியங்கள் சென்ற 19-ஆம் நூற்றுண்டில் தமிழ்நாட்டில் வேரூன்றி, செழித்தோங்கி வளரத்தொடங்கின.

வீரமாமுனிவர்க்கு முன் சிலர் உரைநடை எழுதியிருந்தாலும், அவர் எழுதிய உரைநடை சிறந்ததாய் இருப்பதால் அவரது உரைநடையைக் காண்போம். அவர்தம் உரைநடை இலக்கியம் பயிலும் மாணவர்க்கு இன்பம் அளிக்கும் நடை. அஃது உரைநடைவளர்ச்சிக்குக் காலாக இருந்தது. வீரமாமுனிவர் செய்த நூல்களுள் வேதியர் ஒழுக்கம், அவிவேக பூரண குருகதை ஆகியன குறிப்பிடத்தக்கவை. 'இந்நூல்கள் தமிழ் இலக்கணத்தை மாத்திரம் கற்ற ஓர் அன்னியர் எவ்வகைத்தமிழ்உரைநடை எழுத முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டுகளாகும்' என்று ந. சி. கந்தையாப்பிள்ளை அவர்கள் கூறுகின்றுர்கள்.

''அறமெனப்பட்ட யாவு மன்னுயிர்க்கோருயிராகவும் மனத்திற்கோ ரணியாகவும் நெஞ்சத்திற்கொரு செல்வமாகவும் வழங்கு மியல்புடையன வாகையிற் புறத்துத்தோன்

றும் வேற்றுருக்கோலங்காட்டி யகத்துண் ணுமையா வற மோ அறத்தின் பேறும் பெருமையுடைய வென்பர். எப் பொருளினும் அதன் உண்மை உணர்தலே ஞானம். உணர்ந்த பொருளி னிவையே நல்லவை யெனவும் இவையே யல்லவை யெனவுந் தெளிதலே காட்சி. தெளிந்த வழியே யல்லவை யொருவி நல்லவை மருகி யொழுகலே வொழுக்கம்.''

வீரமாமுனிவருக்கு இருபது ஆண்டுகளின் பின்வாழ்ந்த சிவஞானமுனிவர் உரைநடையை நோக்குவோம். இவர்போக் கையே பின்பற்றிக்கண்டனங்களும் சைவ மடங்களின் நூல் களும் எழுதப்பட்டன. இவர்தம் நடை அறிஞர்கள் மட்டி லுமே படித்தின்புறுவதற்கு ஏற்றதன்றி, பொதுமக்கள் கற்றறியக்கூடிய எளிமை உடையதாய் இருக்கவில்லை. இவர் உரையாசிரியர்கள் சென்ற போக்கினின்றும் விலக விரும்ப வில்லை. இவர் நடைக்கும், மேற்கு நாடுகளிலிருந்து வந்த பாதிரிமார் தோற்றுவித்த நடைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு

நிற்க, இவருக்கு முன் நிரம்பவழகிய தேசிகர், மயி லேறும் பெருமாள் பிள்ளை, (கி. பி. 1670) வைத்தியனுத தேசிகர், (கி. பி 1680) சங்கரநமச்சிவாயர் (1700) போன் ருர் உரைநடை எழுதினர்கள் என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

கி. பி. 1826-இல் சென்னை மாநிலக்கல்லூரியில் தமிழ்ப் புலவராக இருந்த தாண்டவராய முதலியார், மராத்தி மொழியிலிருந்து பஞ்சதந்திரக் கதையைத் தமிழில் மொழி பெயர்த்தார். இவர் நடையில், வீரமாமுனிவர், சிவஞான முனிவர் நடையிற் காணப்படாத சில மாறுதல்களைக்காண லாம், இவர்நடை விளக்கமும் எளிமையும் உடையது.

ஆராய்ந்தெடுத்த முதுமொழிகளை இவர் இடையிடையே கையாண்டுள்ளார். இதனாலும் இவர் நடை அழகுறுகின்றது. இவருக்குப்பின் வீராசாமிச்செட்டியார் (கி. பி. 1826) விநோத இரசமஞ்சரி என்னும் நூலை எழுதினர். இதற்குப் பின் மூலைமுடுக்குகளிலிருந்தெல்லாம் பல நூல்கள் எழத் தொடங்கின.

இவருக்குப்பின் யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர் பல உரைநடை நூல்களைச்செய்தார். உரையாசிரியர்களின் உரைநடையில் தோய்ந்த நாவலர் எங்கும் விளங்கக்கூடிய முறையில் உரைநடை நூல்களை வெளியிட்டது வியப்பளிப்பதேயாம். அவரது நடை எளிமையும் தூய்மையும் வாய்ந்தது. மேற்கோள்:- "அன்பானது, குடத்துள் விளக்கும் உறையுள்வாளும் போல ஒருவர் காட்டக் காணற்பாலதன்று; அவ்வன்புடைமையால் வெளிப்படும் செயல்களைக் கண்டவழி, இவை உண்மையால் இங்கே அன்பு உண்டென்று அநுமிதித்துக் கொள்ளற்பாலதாம்." இராமலிங்க அடிகள் சீவகாருண்ய ஒழுக்கம் முதலான சில உரைநடை நூல்களை இயற்றியருளினர்.

(தொடரும்)



# மங்கல வாழ்த்துப் பாடலின் மாண்பு

புலவர் இரா. இளங்குமரன், மு. மு. உயர்பள்ளி. திருப்பரங்குன்றம்.

(56 ஆம் தொகுதி. 229 ஆம் பக்கத்தொடர்ச்சி)

அருள் செய்தலும், அறங்காத்தலும், கொடை புரிதலும் குடிதழுவலும் செங்கோல் வேந்தர்கள் தம் கடன்களாம். அவற்றைக் கடன்களாகக் கொண்டிருக்கு மாற்றைத் தமக் கும் பிறருக்கும் அறிவிக்குமாறே குடையையும் திகிரியையும் கருவிகளாகக் கொண்டனர். கொடையையும் குடியோம் பலையும் குணங்களாகக் கொண்டனர்.

பொறுப்பு மிகக்கொண்டு கடனாற்றுவோர் வாழ்வில் களிப்புக்கு இடம் மிகக்குறைவே. அக்களிப்பும் நேரிடை யாக வாய்ப்பதும் இல்லை. தம் கடனாற்றலால் பிறர்வாழ்வில் இன்பம் மல்கிற்றேல் அவரின்பம் நோக்கி இவரின்பம் கொள்வார். அதுவே இவர்பெறும் இன்பமாம். அன்றிக் களியாட்டம் ஆடிக் கண்டவாறு பொழுதைக் கழித்துத் திரிவோர் உளரேல் அவர் அறவகையால் கடப்பாடு ஆற்று தலைத் துறந்தவர் ஆதல் வேண்டும். ஆயின், மக்களை உயி ரெனக் கருதும் மன்னவன் வாழ்வு வெளித் தோற்றத்திற் குப் பல்வேறு நலங்கள் கனிந்ததாக இலங்கினலும் உள் நோக்கி அறிவார்க்கு இன்னல்பல பயப்பதே என்பது தெளி வாம். இதனலே 'பொன்முடியன்று மன்னவர் சூடுவது, முள்முடியே" என்று மொழிந்தோரும் உளர்.

அடிகளார், வடவாரியர் படைகடக்க நிற்கும் அண்ணன் வாயிலாக,

"மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்"

என்று தெளிவாய் உரைத்து. மழை உரிய காலத்தில் பெய்யா விட்டாலும், மக்கள் பல்வேறு துயர்கட்கு ஆட்பட்

டாலும் உலகம் மன்னனையே பழிக்கும். ஆகலின் மன்னவர் நன்குடிப்பிறத்தல் துன்பந்தருவதே அன்றி இன்பஞ்செய்வது இல்லை என்று வற்புறுத்துகிருர்,

செங்கோல் மன்னனுக்குத் தன்னுயிர் எனஒன்று இல்லை. மக்களே அவன் உயிர். அவ்வாருயின் மக்களாம் உயிர்க்குத் துயர் வருமாயின் அத்துயர் நேரிய மன்னனைச் சீரிய வாள் போல் வாட்டுதல் உறுதி.

மன்னுதல் என்னுஞ் சொல்லுக்கு நிலை பெறுதல் என்பது பொருளாம். உலகில் நிலை பெற்றவனே அரசன் ஆவான். அரசப் பொறுப்பு ஏற்றவர் அனைவரும் அரசர் ஆகலாம். ஆனல் உலக ஏட்டில் மன்னினேர் அன்றி மற்றையோர் மன்னவர் ஆகார். இவ்வுலகம் நிலையிலாத் தன்மையுடையது. நிலையிலா உலகில் நிலைப்பது எளிதன்று! எல்லோருக்கும் வழிவகை வேண்டுமே!

நிலையிலா உலகில் நிலைக்க வேண்டுமாயின் புகழ்மிக்க செயல்களைச் செய்தாக வேண்டும். புகழ் ஒன்றே அழியாதது. ''ஒன்ரு உலகத்து உயர்ந்த புகழல்லால், பொன்ருது நிற்பதொன்றில்'' என்ருர் அறநெறி அண்ணல். ''மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர், தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே'' என்ருர் புறநானூற்றுப் புலவர்.

புகழ்க் கோவிலுக்குப் புகு வாயில்கள் எத்தனை? ஒன்ரு? இரண்டா? பலப்பல. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை நான்காம். அவை ' கொடையளி செங்கோல் குடியோம்பல்'' என்பவை.

''அடுக்கிய மூவுலகுங் கேட்குமே கொடுத்தார் எனப் படுஞ்சொல்'' என்று கொடைச் சிறப்பை எடுத்துரைக்கின்றது நாலடி. ' பொருள் அற்ருர் அப்பொருளை முயற்சியால்

பெறக்கூடும். ஆனால் அருள் அற்றார்? அருள் மட்டுமோ அற்றார்? அனைத்தும் அற்றார்'' என்கின்றது குறள். "கொடும் புலி வாழுங் காட்டினுங் கொடிது கொடுங்கோல் மன்னர் வாழு நாடு'' என்று கூறிச் செங்கோலின் அவசியத்தை வற்புறுத்துகின்றது பிற்கால நூல். ''மன்னவ! வெயில் மறைக்கு மாறு எடுக்கப்பட்டதோ நின்வெண்கொற்றக்குடை; குடிகளைக் காப்பதற்காக அன்றோ எடுக்கப்பட்டது'' என்று பன்னுகின்றது தொன்மை நூல். இவ்வனைத்தையும், இறை மாட்சியிலே,

> ''கோடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
> உடையானும் வேந்தர்க் கொளி

என்றார் பொய்யில் புலவர். கண்ணாகிய உறுப்பு இருந்தும் அதனிடை ஒளிவரப் பெறார் கண்ணுடையர் ஆகார். அது போல் அரசப் பொறுப்பு இருந்தும் இந்நான்கு பண்புகளும் இல்லார் அரசர் ஆகார். உடையவரே அரசர் — அரசருள் ஒளியுடைய (புகழுடைய) அரசர். ஆகலின், தகை மாண்ட புகழ்க்கோவிலுக்குச் செல்லும் வகைமாண்ட வாயில்கள் பலவற்றுள்ளும் கொடை அளி செங்கோல் குடியோம்பல் என்னும் நான்கும் நற்கலை கவினிய பொற்புறு கோபுர வாயில்கள் எனல் ஏற்கும் இனி, இதற்கும் சிலப்பதிகார மங்கல வாழ்த்திற்கும் உரியதொடர்பு என்னை எனில் காண்போம்.

''முடிகெழு வேந்தர் மூவருக்கும் உரிய தொடர் நிலைக் காவியத்தை அடிகளே பாடவேண்டு'' மென்று தண்டமிழ்ச் சாத்தன் வேண்டிக்கொண்டதற்கு ஏற்பச், சிலம்பு பாடும் சேரர்வழி வரும் அடிகள், அரசர்க்கு ஒளியாம் வழிகளைத் தெளிய உரைக்கின்றார். அவ்வாறு உரைக்கும் இடங்கள் பலவாயினும் தலையாய இடம் மங்கல வாழ்த்துப்பாடும் இடமாகும்.

"யாம் திங்களைப்போற்றுவேம் - சோழனது வெண்குடை போன்று தண்ணளி செய்தலால்; யாம் ஞாயிறு போற்றுவேம்- சோழனது சக்கரம் போல் மேருமலையை வலஞ்சுற்றி வருதலால்; யாம் மாமழையைப் போற்றுவேம்– சோழன் அருள் போல் பொழிந்து வளம் பெருக்குதலால்; யாம் பூம்புகார் போற்றுவேம் - சோழன் குலத்துடன் தோன்றி உயர்ந்து விளங்குதலால்." என்னுங் கருத்தினை,

> "திங்களைப் போற்றுதுந் திங்களைப் போற்றுதுங்
> கொங்கலர் தார்ச்சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
> வங்கண் உலகளித்த லான்
>
> "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
> காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
> மேரு வலந்திரித லான்.
>
> "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
> நாமநீர் வேலி உலகிற் கவனளிபோல்
> மேனின்று தான்சுரத்த லான்.
>
> பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
> வீங்குநீர் வேலி உலகிற் கவன் குலத்தோ
> டோங்கிப் பரந்தொழுக லான்"

என்று இசைநலந் திகழுமாறு பாடுகின்றார் அடிகள்.

இப்பாடல்களில், திங்களால் குடிக்கு நிழலாம் அளியும், ஞாயிற்றால் செங்கோலாம் ஆண்மையும், மழையால் வளஞ் சுரக்கும் கொடையும், பூம்புகாரால் குடிகளைத் தழுவிக் காத்தலும் குறிக்கப்பட்டமை ஊன்றி உணர்வார்க்குத் தெளிவாகாமற் போகா.

அரசர்க்கென அறநூல் வகுப்பதையே தாமும் கூறுவான் எடுத்துக்கொண்ட அடிகள் நூலின் தொடக்கப்பகுதியிலேயே இயற்கை வாழ்த்துரைக்கு முகத்தான் இவற்றை

இனிதின் ஓதுகின்றார். தொடக்கமும் முடிவும் எவருள்ளத்தையும் எளிதில் ஈர்த்து நிலைபெறுத்தும் பெற்றி கொண்டு இலங்குவனவாம். ஆதலால் அரசநெறியினை மங்கல வாழ்த்திலே கூறும் அடிகள் மாந்தர் வாழ்வுக்குரியதாம் பொதுவான அறங்களை வரந்தருகாதையிலே கூறித் தம் காப்பியத்தை முடிக்கின்றார்.

மங்கல வாழ்த்திலே கூறும் குறிப்புரைகளை நூலகத்து விரித்தும் விளக்கியும் செல்வது அடிகட்கு இயல்பு இவ்வியல்பு அவர்க்கு உளதாதலை நூலின் மேற்போக்காக நோக்குவோரும் எளிதில் அறிவர்.

திங்களை வெண்குடையுடன் இணைத்த அடிகள், "தண் மதியன்ன தமனிய வெண்குடை" (28:1—2) என்று வடிவுக்கும் "மண்குளிரச் செய்யும் தண்குடை" (19:21) என்று பண்புக்கும் ஒப்புமை காட்டியுள்ளார்.

ஞாயிற்றைச் செங்கோல் சிறக்கச் செய்யும் அறத் திகிரியுடன் ஒப்பிட்டுக்காட்டும் அடிகள், 'விரிகதிர் பரப்பி உலக முழுதாண்ட, ஒரு தனித் திகிரி உரவோன்" (4;1—2)என்று வடிவுக்கும், "பொற்கோட்டுழையதா எப்பாலும், செருமிகு சினவேற் செம்பியன் ஒரு தனியாழி (1:66—7) எனத் தொழிலுக்கும் உவமை காட்டியுள்ளார்.

கொடையினை மழையொடும் குறிக்கும் அடிகள், சோழன் கொடைச்சிறப்பையும், சேரன் கொடைச்சிறப்பையும் கேட்டோர் நயப்பும் வியப்பும் ஒருங்கு எய்துமாறு உரைப்பதே அன்றி, 'மன்னவர் பின்னோர்' என்று குறிக்கப்படும் வணிகருள் உயர்ந்தோங்கிய மாநாய்கனை "மாகவான் நிகர் வண்கையன்" (1—23) என்றும், கோவலனைச்

"செம்பொன் மாரி செங்கையிற் பொழிந்தோன்" (15:41) என்றும் கூறுகின்றார்.

குலத்தோடு ஓங்கிப்பரந்தொழுகும் நிலச்சிறப்பினைக் கூறும் அடிகள் "பதியெழுவறியாப் பழங்குடி கெழீஇய, பொதுவறு சிறப்பிற் புகார்" (1:15—6) என்றும் "பதியெழு வறியாப்பண்பு மேம்பட்ட மதுரை மூதூர்" (15:5—6) என்றும் குறிப்பிடுகின்றார்.

இவற்றை நோக்குங்கால், திங்களும் ஞாயிறும் மழையும் மண்ணும் தந்தொழில் திரியாத் தகைமையவாக் கடனாற்றினாலும், கொடையளி செங்கோல் குடியோம்பல் ஆய நான்கினையும் ஆட்சியும் அரசும் பேணுவிடில் கேடு அன்றி நன்மையுறுதல் இல்லை என்றும், கோன்நிலைதிரியின், கோல்நிலை திரிந்து, கோள்நிலையும் திரியும்என்றும், ஆள்வோர் செம்மை ஒன்றனே தான் ஆட்சிக்கு உட்பட்டோருக்கு நன்மை ஒருதலையாய் எய்தும் என்றும் அடிகள் கருதியமை புலனாகும்.

அடிகள் அறத்தை உயிரெனக் கொண்டவர். அறத்தின் வழியே அரசியல் இயங்க வேண்டும் என்று கருதுபவர். அவ்வாறு இயங்கின், மாந்தரும் அறநெறியின் வழியே செல்வர் என்னும் அசையா உறுதியுடையவர். அறத்தை நிலைபெறுத்துமாறும், மறத்தைக் கடிந்தொதுக்குமாறும் செய்தற்கு இலக்கியமே உயரிய கருவி என்று கொண்டவர். இவற்றுக்கு ஏற்பவே அறவாழ்த்துப்பாடி நூலைத் தொடங்குகின்றார்.

(தொடரும்)

56 ஆம் தொகுதி 358 ஆம்பக்கத் தொடர்ச்சி

# இளம்பூரணர் எழுத்துரை

[ஆ. சிவலிங்கனுர். மயிலம்.]

## 10. உரைக்குறிப்புக்கள் (தொடர்ச்சி)

### 4. புணரியல்

**104** முன்றுதலே...... ஆயீரியல

"ஈற்ருேடு என்பது விகாரத்தால் தோக்கது"

ஈறு + ஒடு என்பன ஈற்ருேடு எனவரும். அவ்வாறின்றி நூற்பாவில் 'ஈருேடு' எனவந்தது. அதனுல் (றகரம்) விகாரத்தால் தொக்கது என்ருர்.

**106.** குற்றிய......மோழிப

"இம்மாட்டேறு ஒருபுடைச்சேறல்"

இதன் முன் நூற்பா, "மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்" (105) என்பதில், மொழியிறுதி மெய்யெல்லாம் புள்ளியொடு நிற்கும் என்ற கருத்தும், 'மொழிமுதல் மெய் புள்ளியொடு நில்லாது' என்ருது 'ஈறெல்லாம் புள்ளியொடு நிலையல்' என ஈற்றின்மேல் வைத்துக்கூறியவதனுல் 'அவ்வீற்றின்மெய் உயிர் முதன்மெய் வந்த விடத்து அஃது ஏற விடங்கொடுக்கும் என்பது பெறப்பட்டது' என்ற கருத்தும் ஆக இரணடு கருத்துக்கள் கூறப்பட்டன. அவற்றுள் இந்நூற்பா 'உயிர் ஏற இடங்கொடுக்கும்' என்ற இரண்டாவது கருத்திலேயே மாட்டேற்றப்படுதலின் ஒருபுடைச்சேறல் என்ருர்.

**108.** உயிரிறு......புணர்நிலேச்சுட்டே

"விளவினைக் குறைத்தான் என்பது அவ்வுருபு குறித்து

வருகிளவியை நிலைமொழியுள் அடக்கி இருமொழிப் புணர்ச்சியாய் நின்றவாறு அறிக''

'விளவினைக்குறைத்தான்' என்பது. விள+ஐ+ குறைத் தான் எனப் பிரிக்கப்படும். அப்படியாயின் விள+ஐ என் பது நிலை வருமொழிகளாய் நின்று 'விளவினை' என இரு மொழிப் புணர்ச்சியாயும் பின் அவை 'குறைத்தான்' என்ப துடன் சேரும்போது மும்மொழிப் புணர்ச்சியாயும் வந்த தன்றோ எனின் அன்று. 'குறைத்தான்' என்ற வருமொழி யோடு புணர்க்கப்படும்போது 'விளவினை' என்பது. ஒரு மொழியாகவே கொண்டு நிலைமொழியாக நிறுத்தப்பட்டுப் புணர்க்கப் படுதலின் இருமொழிப்புணர்ச்சி யென்றே கொள்ளவேண்டும்.

*111.* நிறுத்தசொல்லும்......புணர்நிலைக்குரிய

"ஈண்டு அடையென்றது உம்மைத் தொகையினையும் இருபெயரொட்டுப் பண்புத் தொகையினையும் என வுணர்க''

(வி·ம்) உரையாசிரியர் உம்மைத் தொகையும் இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகையுமே இரண்டு சொற்களாகப் பிளந்து இசைப்பன என்றும் மற்றைத் தொகைகள் அவ் வாறு பிளந்திசைக்காமல் ஒருசொல் நீர்மையிலேயே இசைப்பன என்றுங்கொண்டமையால் இவ்வாறுஎழுதினர். ஆயிரம் என்பது பத்து என்ற அடையுடன் பதினாயிரம் என வந்ததாகக் கொள்க. மற்றைவினைத்தொகை முதலியன நிலைவருமொழிகளுள் ஒன்றன் பொருட் சிறப்பைநோக்கி ஒருசொல் எனப்படும் உம்மைத்தொகையிலும் இருபெயர் ஒட்டுப்பண்புத்தொகையிலும் நிலைமொழியிலும் வருமொழி யிலும் பொருட் சிறப்புண்மையின் பிளந்து இசைத்தலின் இருசொல் எனப்படும்.

112 மருவின்.........புணர்நிலைச்சுட்டே

"நிலை யென்றதனான் இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ வழக்கல்லா மரூஉவழக்கும் புணர்க்கப்படும் எனக் கொள்க"

(வி-ம்) மீகண், முன்றில் என்பன இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ வழக்குகள். இவை மீ + கண் எனவும், முன் + இல் எனவும் வைத்துப் புணர்க்கப்படும். இலக்கணத் தோடு பொருந்தாத மரூஉவழக்கு சென்னை, அருமந்த முதலி யன. இவை இவ்வாறு மரூஉவாயினமைக்கிலக்கணம் இல்லை. என்றாலும் இவையும் நிலைவருமொழிகளாக நிறுத் திப் புணர்க்கப்படும். சென்னை + கு = சென்னைக்கு எனவும், அருமந்த + பிள்ளை = அருமந்த பிள்ளை யெனவும் காண்க.

115. வல்லெழுத்து......... வேண்டும்.

போற்கு, போற்கண் = மெய்பிறிதாதல் — அஃறிணை

ஆங்கண்: ஆங்கு + கண் — குன்றல்.

அவற்கு, இவற்கு = மெய்பிறிதாதல் — உயர்திணை.

நுங்கண்: நும் + கண் = குன்றலும் மிகுதலும். இதில் மகரம் கெட்டு ஙகரம் மிக்கது. இப்படியே பிறவும் காண்க.

116. ஆறன்உருபின்......வேண்டும்'

"நமது, எமது, தனது, எனது, நினது"

இவைகளுள் நாம், யாம் என்பன நம் எம் எனத்திரிதற்கு "தாம் நாம் என்னும் மகரவிறுதியும்' (189) என்னும் நூற் பாவும், தான், யான் என்பன 'தன்' 'என' எனத்திரிதற்கு. "தான் யான் என்னும் ஆபீரிறுதியும்" (193) என்னும் நூற்பாவும் 'நீ என்பது 'நின்' எனத் திரிதற்கு "நீயென் ஒருபெயர்" (180) என்னும் நூற்பாவும் விதிகளாயின. பின் இவைகள் நம, எம, தன, என, நின என அகர எழுத்துப்

பெறுதற்கு "ஆறன் உருபினும் நான்கன் உருபினும்" (162) என்னும் நூற்பாவிதி கொள்க. இவ்விதிகளால் பொருத்திக் கொண்டு பின்னர் இந்நூற்பாவிதி கொள்க.

122 அளபாகும்.......நிலேத்தே

> "நிலேத்து என்றதனுல் பிறவுபியும் இன்னின் னகரம் றகரமாதல் கொள்க. பதிற்ருென்று. பதிற்றேமு என வரும்"

அளபாகும் மொழி யென்றவிடத்தில் அளபாவது முகத்தல் அளபெனக் கொண்டுவிட்டமையால் எண்ணல் அளவினேக் காட்ட இவ்வாறு எழுதினுர். "அளவிற்கும் நிறையிற்கும்" (171) என்ற நூற்பாவில் அளவென்பது முகத்தல் அளவை யாகக் கொள்ளப்பட்டமையறிக.

125 ஆனின் னகரம்.......தொழிற்கே.

ஞாபகத்தாற் கொள்ளுதலாவது அறிவாற் கொள்ளு தல். "ஞாபகம்=ஞாபகங்கூறல் என்னும் உத்தி. அஃதாவது நூற்பாவைச் சொற்சுருங்கவும் பொருள் விளங்கவும் செய் யாது அரிதும் பெரிதுமாகச் செய்து அதனுல் வேறு பல பொருள் உணர்த்தல்"- பாவாணர்.

130 "அம்மின்இறுதி.........ஙஞுநவாகும்"

> "தன்மெய் என்றதனுல் அம்மின் இறுதி மகரமே யன்றித் தம், நம், நும், உம் என்பவற்றின் இறுதி மகரமும் திரியும் என்பது கொள்க. எல்லார்தங்கை யும், எல்லார்நங்கையும், எல்லீர்நுங்கையும், வான வரி வில்லுந்திங்களும் எனவரும்".

இங்குள்ள 'உம்' என்பது சாரியை உம் அன்று. எண்ணும் மைப் பொருளில் வந்த இடைச்சொல் எனக்கொள்க. சாரியை இடைச் சொல்லாயின் பொருள்தாராது. தம், நம், நும் என்பனவற்றுக்குப் பொருள் இல்லாமை அறிக.

## 5. தொகை மரபு

144 கசதப.. ...வயினை

"தோன்றும் என்றதனால் தோன்றி நின்றனவும் அவ்வாறே திரிந்து மெல்லெழுத்தாம் என்பது. மரங்குறிது."

தோன்றி நின்றன என்பதற்கு இயல்பாகவே தோன்றி நின்றன என்று கொள்க. மரம் என்பதில் மகரம் இயல் பாகவே உண்மை காண்க.

145 ஞநமயவ......இயல்பாகும்மே

"எல்லாம் என்றதனால் ஒற்றிரட்டலும் உடம்படுமெய் கோடலும் உயிர் ஏறி முடிதலும் எனவரும் இக் கருவித்திரிபு மூன்று திரிபும் அன்மையின் திரிபெனப் படா என்பது கொள்க"

ஒற்றிரட்டல் முதலிய மூன்றும் கருவித்திரிபுகள். நிலை மொழியிறுதியும் வருமொழி முதலும் சேர்க்குமிடத்து அவ்விரண்டெழுத்துக்கள் பற்றிய திரிபுகளே செய்கைத் திரிபுகள் எனப்படும். மற்றையன யாவும் கருவித்திரிபுகள் எனப்படும். செய்கையென்பது நிலைமொழியீற்றையும் வருமொழி முதலையும் புணர்க்கும் செய்கை. கருவி என்பது அச்செய்கைக்கு வேண்டி முன் ஏற்பாடு. ஒற்றிரட்டுதல் முதலியன கருவித்திரிபுகள் ஆதலின் செய்கைத் திரிபெனப் படா. மூன்று திரிபு: தோன்றல், திரிதல், கெடுதலாகிய செய்கைத்திரிபுகள்.

147 ஞனவேன்......புலவர்.

"ஞாமுற்கூறாது யா முற்கூறியவதனால் யாமுதல் மொழிக்கண் ஞாவரும் என்று கொள்க"

"யாத்த" என்பது "ஞாத்த" எனவருவது போல "ஞான்ற" என்றது "யான்ற" எனவாராமை பற்றி இவ்வாறு

எழுதினர். 'மண்ஞான்றது" என்றவழி 'மண் யான்றது' என்று வாராமை யுணர்க' என நச்சினர்க்கினியர் எழுதினர்.

156 அஃறிணை......உளவே

இந்நூற்பாவில் 'அஃறிணை விரவுப்பெயர்' என்பதற்கு, 'உயர்திணையோடு அஃறிணை விரவும் விரவுப்பெயர்' என உரையெழுதினர். 'சாத்தன்' என்பது முதலில் உயர்திணைப் பொருளிலிருந்து பின் அஃறிணைப் பொருள் வந்து கலக்க விரவுப்பெயராயிற்று என்பது கருத்து.

159 வேற்றுமையல்வழி......புலவர்

"ஒல்லைக்கொண்டான் என்பது ஐகாரவீற்று வினைச் சொல் மிகுதி"

ஒல்லை என்பது விரைந்து என்று பொருள்படுதலின் வினைச் சொல் என்ருர். உரிச்சொல் வினைச்சொல்லாக வந்ததுஎனக் கொள்க.

161 நெடியதன்......என்ப

ஆண்டெல்லாம் = நெடியதன் முன்னர் ஒற்றுள்ளவிட மெல்லாம்.

"நெறியியல் என்றதனுல் குறியதன் முன்னர் நின்ற ஒற்றின்றிய புணர்ச்சியாற் பெற்றதும் இரட்டும் என வுணர்க."

'அ' என்பது 'அடை' என்பதுடன் சேரும்போது 'வ்' எழுத்து இடைவந்து 'அவ்' எனநின்று பின்னர். 'அடை' என்பதின் அகரம் ஏறிமுடியுமுன் அவ் வகரம் இரட்டி 'அவ்வ்' என நின்று 'அவ்வடை' என்ருயினமை காண்க.

162 ஆறன் உருபி..... முன்னன

"கூறிய என்றதனுல் நெடுமுதல் குறுகாத மொழிக்கு இவ்விருவிதியும் கொள்க. எல்லார்தமதும், எல்லார் தமக்கும் எனவரும்"

தமதும், தமக்கும் என்பவற்றிலுள்ள 'தம்' என்பது சாரியையாம். தாம் என்ற பெயர்க்குக் கூறப்பட்ட விதிகள் தம் சாரியைக்கும் பொருந்தும் என்றூர் என்க.

169 "அத்திடை......கலமேன் அளவே"

கலத்துக்குறை. இது கலம் + குறை எனப்பிரிக்கப்படின் "குறையென் கிளவி முன்வருகாலை, நிறையத்தோன்றும் வேற்றுமையியற்கை" (167) என்ற நூற்பாவின் மாட்டேற்றுப்படி 'மகரவிறுதி வேற்றுமையாயின்' ( )என்ற நூற்பாவின் விதிப்படி) மகரம் கெட்டு வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிந்தது எனக்கொள்க.

கலன் + குறை எனப்பிரிக்கப்படின் நிலைமொழி ஒற்றுக் கேடும் வருமொழி ஒற்றுப்பேறும் "அத்தேவற்றே" (134) என்னும் நூற்பாவினற் கொள்ளப்படும். இவ்விருபுணர்ச்சியும் பற்றிய விளக்கத்தினைத் 'திரிந்ததன் திரிபு' என்ற கட்டுரையிற் காண்க.

"சாரியை முற்கூறியவதனல் இன்சாரியை பெற்றவழி
முன் மாட்டேற்ருன் எய்தியவல்லெழுத்து வீழ்க்க"

என உரையாசிரியர் எழுதியது 'கலம்' என்ற மகரவீறு நோக்கி எனக்கொள்க. ஏன் எனின் இன்சாரியை பெற்றவழி வீழ்க்கும் வல்லெழுத்து ஈற்றுவல்லெழுத்தே யன்றிச் சாரியை வல்லெழுத்தன்று ஆகலான் என்க.

171 'அளவிற்கும்.......மொழிப'

"மற்று இவ்வரையறை கூறிப்பயந்தது என்னை
யெனின் மேல் அகத்தோத்தினுள் அவற்றிற்கு முடிபு
கூறும் வழி அதிகாரத்தான் வன்கணத்தும் மேற்
சொல்லா தொழிந்த கணத்தினும் சேறற்கு என்பது."

அளவும் நிறையும் வேற்றுமையியல (320) என்ற நூற்பா

வில் அதிகாரத்தால் வல்லினமுதல் அளவுப்பெயர்களும் நிறைப்பெயர்களும் கொள்வதும்.

> அளவும் நிறையும் எண்ணும் வருவழி
> நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்
> கடிநிலை யின்றே யாசிரியர்க்க. (390)

என்ற நூற்பாவில் வருமொழி யின்ன கணத்தது என்று சொல்லா தொழியினும் நாற்கணமும் கொண்டதும்நோக்கி யிவ்வாறு எழுதினர்.

172 ஈறியல் மருங்கின்......நிலையே

"விளஞான்றது என்புழி நிலைமொழிப் பெயரது இயல்பும், ஞான்ற ஞாயிறு என நிலைமொழி வினையாயவழி இருமொழிபியல்பும் ஆகிய "ஞநமயவ" (தொகை-5) என்பதன் ஒழிபும்."

"ஞநமயவ" என்ற நூற்பா, "இருபத்துநான்கு ஈற்றின் முன்னும் வன்கணம் ஒழிந்த கணங்கட்கு இருவழியும் வருமொழி முடிபு கூறப்பட்டது. அதில் நிலைமொழியீறு என்ன வாகும் என்பது கூறப்படவில்லை. பிறவிடங்களிலும் கூறப்படவில்லை. இருபத்துநான்கு ஈற்று மொழிகளும் பெயராகவே கொண்டு கூறப்பட்டனவாதலின் நிலைமொழி 'ஞான்ற' என்பது போன்ற வினையாயவழி நிலைமொழியீறும் வருமொழி முதலும் எவ்வாறும் என்பதும் யாண்டும் கூறப்படவில்லை. இவையிரண்டும் இந்நூற்பாவிலேயே கொள்ளல் வேண்டும். இவ்வாறே பிறவும் காண்க.

## 6. உருபியல்

180 நீயென்ஒரு......ஒற்றுகும்மே

"ஒருபெயர் என்றது நின் என்பதும் வேறொரு பெயர் போறலை விலக்கிற்று". 'நீன்' என்பதும் உலகில் வழக்கில் இருப்பதாதலின் அதன் திரிபு 'நின்' எனவும் கொள்ளக்

கிடத்தலின். ஒரு பெயர் என்றது, அதனை விலக்கி 'நீ' என்பதன் திரிபே 'நின்' என்பதனையுணர்த்திற்று என்க.

185 எனைவகரம்......சிவணும்

"மற்றிது உரிச்சொல் அன்றோவெனின் உரிச்சொல்லேயெனினும் படுத்தலோசையாற் பெயராயிற்றெனக் கொள்க"

'தெவ்' என்பது உரிச்சொல். இவ்வதிகாரத்துப்பெயர் வினையல்லன வற்றிற்குக் கருவி செய்யாமையின் இங்குஇது கூறியது என்னை என்பது வினா, உரிச்சொல் தனித்து வாராது. அதனால் 'தெவ்' என்பது 'ஐ' முதலிய உருபுடன் சேரும்போதுஉரிச்சொல் நிலை நீங்கிப் பெயர்நிலை யெய்தும். அப்போது அது படுத்தல் ஓசையாற் கூறப்படும் ஆதலின் இங்கு இலக்கணம் கூறினார் என்பது.

190 எல்லாம்......இறுதியான

"முற்ற என்றதனால் .. உம்மின் உகரக்கேடு கொள்க"

ஒடு, கு, அது என்பனவற்றின் இறுதி உகரம் முற்றுகரம் ஆதலின் உயிர் ஏறஇடம் கொடாமை பற்றி உம்மின் உகரம் கெடும் என்றார்.

192 எல்லாரும்......மொழிக்கே

"படர்க்கை முன்னிலை யென்ற மிகுதியான்"

எல்லாரும் என்ற அளவிலேயே படர்க்கை என்பதும், எல்லீரும் என்ற அளவிலேயே முன்னிலையென்பதும் பெறப்படுமாதலின் படர்க்கை முன்னிலை என்பன மிகுதிகளாம் என்க.

197 நெட்டெழுத்......அல்வழியான

"அவ்வீறு இன்சாரியை பெறுவது ஆண்டாயின் பெறாது"

அவ்வீறு = நெடில் தொடர்சுறு.

இன்சாரியை பெறுவது = "குற்றியலுகர......இன்னென்சாரியை (196) என்ற நூற்பாவின் விதிப்படிப் பெறுவது.

ஆண்டாயின் = ஒற்றுமிகத் தோன்றுமிடத்தாயின்.

203 புள்ளி.......கடப்பாடிலவே

"உயிரீற்றுள் ஒழிந்தது ஒன்று"

இவ்வுருபியலில், 'அ ஆ உ ஊ' (174) என்ற நூற்பாவால் அ, ஆ, உ, ஊ, ஏ, ஔ என்னும் ஆறீற்று மொழிகளும், "சுட்டுமுதலாகிய" (178) "யாவென்வின" (179) ஆகிய நூற்பாக்களால் ஐகாரவீற்றுமொழிகளும், "நீயென் ஒரு பெயர்" (180) என்னும் நூற்பாவால் ஈகாரவீற்றுமொழியும், "ஓகார விறுதிக்கொன்னே சாரியை,' (181) என்பதால் ஓகாரவீற்று மொழியும் ஆக ஒன்பதிற்று மொழிகள் கூறப்பட்டன. "எகரஒகரம் பெயர்க்கிருகா" (273) என ஆசிரியர் விலக்கிய இரண்டெழுத்துக்கள் நீங்க, இகரவீறு ஒன்றுமே இங்குச் சொல்லப்படா தொழிந்ததாம் என்க.